திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 ஏப்ரல் 29

இயந்திரங்கள், கருவிகளை தக்க தருணத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் அதன்மூலம் நாட்டுக்கு நேர இருந்த ஒரு மிகப் பெரிய இழப்பு நேரிடா வண்ணம் தடுத்ததற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான் மனமுவந்து பாராட்டுகிறேன். நாம் பெரிதும் மதித்து போற்றக்கூடிய அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நடக்க இருந்த விபத்திலிருந்து தப்பித்ததற்காக இறைவனுக்கு நன்றி சொல்லி அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து இன்னும் நாட்டிற்கு செயற்கரிய நல்ல பணிகளைச் செய்ய வேண்டும் என்று தமிழக மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சபை அந்த உணர்வுகளில் பங்கிட்டுக் கொள்கிறது. எல்லா உறுப்பினர்களுக்கும் எல்லாக் கட்சிக்காரர் களுக்கும் இதே உணர்வுதான். இந்திரா காந்தி அம்மையார் அவர்களோடு அரசியல் கருத்து வேறுபாடுகள் இருக்கலாமே தவிர அவர்கள் உயிரைப் பறிக்க வேண்டும் என்ற கருத்து அல்லது எண்ணம் எந்தக் கட்சிக்கும் இல்லை. அதுவும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தனை பேர்களுடைய வாழ்த்துக்களும் அந்த அம்மையாருக்கு உண்டு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) சட்டமன்ற உறுப்பினர் அந்நிய நாட்டின் தூதுவர் பணியை ஏற்றல்

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இருக்கும் உறுப்பினர் ஒருவர் அந்நிய நாடு ஒன்றுக்கு கான்சலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதுகுறித்து இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விதி 191 (1) (ஈ)-படி உறுப்பினர் பதவியை இழக்கும் நிலை ஏற்படுகிறது. அப்படி பொறுப்பேற்ற உறுப்பினர் இந்த அவையில் தொடர்ந்து இருக்கின்ற நிலை சரியானதுதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்பியிருக்கிறார்கள். ஒருவர் இந்த மன்றத்திலே இருப்பவர், வெளிநாட்டுத் தூதுவராகப் பணியாற்றலாமா என்ற வினா ஒன்றை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு, அரசியல் சட்டப்படி,

Article 192(1).—"If any question arises as to whether a member of a House of the Legislature of a State has become subject to any of the disqualificaions mentioned in clause (1) of Article 191. the question shall be referred for the decision of the Governor and his decision shall be final."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குமரி ஆனந்தன் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களுக்கு இதைப்பற்றி எழுதி, அவர் மூலம் கருத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விவகாரத்தில் தலையிட ஏந்த அதிகாரமும், பொறுப்பும் எனக்கும், இந்த அவைக்கும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் விடுதியில் அமல்படுத்தப் பெற்றுள்ள நடைமுறைகள்.

திரு. கோவைத்தம்பி: பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதியிலே சட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை மாற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றத்திலே எந்தச் சட்டமும் போடவில்லை. உங்களுக்குச் சட்டம் போட என்னால் முடியாது. சில கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு எடுக்கப்பட்ட முடிவாகும். அதிலே சில சங்கடங்கள், சில நேரத்திலே இருக்கலாம். அதை நீங்கள் தளர்த்த வேண்டுமென்று சொன்னால், அது சம்பந்தமாக மீண்டும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி முடிவு செய்கிறேன். இந்தச் சட்ட திட்டங்கள் இருக்க வேண்டாம் என்றால், எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, ஒரே ஒரு மாற்றம். அங்கே வருகின்ற பார்வையாளர்களிடம், எந்தெந்தக் கட்சியிலே இருந்து வருகிறீர்கள் என்று தெரிந்துகொள்ள கேட்டு இருக்கும் ரிசப்ஷனில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிற்பகல் 3 மணியிலிருந்து 6 மணி வரையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அதற்கு மேலும் அதிகமாக அவர்களிடம் பேச வேண்டுமென்றால், அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. உறுப்பினர்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் சபைக்கு வரும்போது தக்க முறையில் படித்துக்கொண்டு வர நேரமில்லை என்று சொல்லும் வகையில் ரொம்ப விண்ணப்பங்கள் பல பேர்களிடமிருந்து வந்திருக்கின்றன. இதை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் எண்ணங்களின்படி தான் அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதை வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதினால், தலைவர்களிடம் வேண்டாம் என்று சொல்லுங்கள். அதற்கு நடவடிக்கை எடுக்க எனக்கு ஆட்சேபணை இல்லை மீண்டும் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டுகிறேன். கட்சித் தலைவர்களிடம் உறுப்பினர்களுக்கு நம்பிக்கை இருக்குமென்று நம்புகிறேன். (குறுக்கீடு) கட்சித் தலைவர்கள் மூலமாகச் சொல்லுங்கள்; முதல்வர் அவர்களிடமும் சொல்லுங்கள். கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி இதுபற்றித் தெரிவிக்கிறேன்.

D-II A 90—5